**செம்பாக்கம் நகராட்சியில் 30.7.2021ம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைப்பெற்ற சாதாரணக்கூட்டத்தின் நடவடிக்கைகளின் நகல்.**

**கலந்துக்கொண்ட தனி அலுவலர் பெயர் மற்றும் பதவி:** **திரு. வே. இராமர்,**
**தனி அலுவலர் / ஆணையாளர்**
**செம்பாக்கம் நகராட்சி**

**பொருள் எண்.1**

செம்பாக்கம் நகராட்சி ஆணையர் அவர்களின் ஜுலை 2021 மாதத்திய நாட்குறிப்பேட்டினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.842** **பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.2**

செம்பாக்கம் நகராட்சியானது சென்னை பெருமாநகராட்சி பகுதியினை ஒட்டி 15 வார்டுகளுடன், 6.25 சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்டு வேகமாக வளர்ச்சி அடைந்து வரும் நகராட்சியாகும். இந்நகராட்சியின் 2011ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 45356 மற்றும் குடியிருப்புகளின் எண்ணிக்கை 11668 ஆகும்.

மேலும், 102.417 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் மற்றும் 48.52 கிலோ மீட்டர் நீளமுள்ள மழைநீர் வடிகால்கள் அமைக்கப்பட்டு நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. தற்போது தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வீடுகளின் கணக்கெடுப்பின் படி (2017ம் ஆண்டு) 16585 குடியிருப்புகளும், 66340 மக்களும் வசித்து வருகின்றனர்.

திடக்கழிவு மேலாண்மை மற்றும் பொதுசுகாதார பணிகளை மேற்கொள்ள தற்போது 22 துப்புரவு பணியாளர்கள் மட்டும் அனுமதிக்கப்பட்டு தற்போது 20 பணியாளர்கள் மட்டும் பணியாற்றுகின்றனர். நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை 5 அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.22043/பி3/2018 நாள் 10.8.2018ன் படி இந்நகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள 130 எண்ணிக்கையிலான தூய்மை பணியாளர்களை மாவட்ட ஆட்சியரால் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி விலை விகிதத்தின் அடிப்படையில் வெளிக்கொணர்வு (Outsourcing) மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி, திடக்கழிவு மேலாண்மை பணிகளை ஒப்பந்த அடிப்படையில் செயல்படுத்தப்பட்டது. இந்த ஒப்பந்தமானது 30.10.2021ம் தேதியில் முடிவடைகிறது.

எனவே, இந்நகராட்சியில் 2021–22ம் ஆண்டிற்கு திடக்கழிவு மேலாண்மை பணிகளை மாவட்ட ஆட்சியரால் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி விலை விகிதத்தின் அடிப்படையில் 130 எண்ணிக்கையிலான பணியாட்களை வெளிக்கொணர்வு (Outsourcing) மூலம் ஒப்பந்த அடிப்படையில் ரூ.232.97 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகளை மேற்கொள்ள போதிய பணியாட்கள் இல்லாததால், பொது மக்கள் நலன் கருதி வெளிக்கொணர்வு (Outsourcing) மூலம் ஒப்பந்த அடிப்படையில் மூன்றாண்டுகளுக்கு மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை 28 அவர்களின் அனுமதிக்கு பிரேரணையை அனுப்ப மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. அனுமதி பெறப்பட்ட உடன் ஒப்பந்தப்புள்ளிகள் கோர மன்றம் அனுமதி வழங்கலாம்.
4. இதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.843 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

செம்பாக்கம் நகராட்சிக்கு கீழ்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவற்றிற்கான நகர் மன்றம் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை முடிவடைவதால், ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்திரவு வழங்கும் வரை ஏற்கனவே பணி உத்திரவு வழங்கப்பட்ட ஒப்பந்ததாரர் மூலம் அதே ஒப்பந்த விலை விகிதத்தில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்ட மதிப்பீடு தொகை | அனுமதிக்கபட்ட தீர்மான எண் மற்றும் நாள் |
|---|---|---|---|
| 1 | செம்பாக்கம் நகராட்சியில் பராமரிப்பில் உள்ள 12 எண்ணிக்கையிலான பூங்காகக்களை காவல் பணிக்காக தேவைப்படும் பணியாட்களை சப்ளை செய்தல் பணி | **9.80** | **736<br>31.12.2020** |
| 2 | நகராட்சி பகுதியில் 145 இடங்களில் உள்ள சிறுமின்விசை மோட்டார்கள் பராமரிப்பு செய்தல் பணி | **9.80** | **772<br>16.2.2021** |

**அலுவலக குறிப்பு** மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று கால நீட்டிப்பு வேலை உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம், கூடுதல் செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 844 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.4**

இந்நகராட்சியில் நாள்தோறும் உருவாகும் 10 முதல் 12 டன் வரை உலர் கழிவுகளை வேறு எங்கும் எடுத்து சென்று சேர்ப்பதற்கு வழிவகை இல்லாததால் பொது சுகாதார நலன் கருதி மற்றும் கொரோனா பெருந்தொற்று காலத்தில் குப்பைகளை தேங்க விடாமல் தொற்று நோய் பரவுவதை தடுக்கும் விதமாகவும், நடை (Trip Basis) அடிப்படையில் ஒரு நடைக்கு உலர் கழிவுகளை

கொண்டு செல்வதற்கு ரூ.12000/– வீதம் (டிப்பர் லாரி வாடகை, டிரைவர் பேட்டா, டீசல், ஆயில், ஏற்றுக்கூலி மற்றும் இதர செலவினங்கள் உட்பட) கணக்கீடு செய்து, அவசர அவசியம் கருதி உள்ளூர் வாகன உரிமையாளர்களிடமிருந்து ஒப்பந்தபுள்ளிகள் பெற்று, இந்நகர் மன்ற தீர்மானம் எண்.778 நாள் 16.2.2021ன் படி ஒப்புதல் பெறப்பட்டு உத்திரவு வழங்கி மார்ச் 2021 வரை பணி மேற்கொள்ளப்பட்டது. அதனை தொடர்ந்து இப்பணியினை தொடர்ந்து செயல்படுத்த வேண்டியுள்ளதாலும், அவசர அவசியம் கருதி ஏற்கனவே ஒப்பளிப்பு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் மூலம் அதே விலை விகித அடிப்படையில் தொடர்ந்து இரு மாதங்களுக்கு (ஏப்ரல் 2021 மற்றும் மே 2021) செயல்படுத்தப்பட்டது. அதனை தொடர்ந்து, அவசர அவசியம் கருதி ஜூன் 2021 மற்றும் ஜூலை 2021 ஆகிய இரு மாதங்களுக்கும் செயல்படுத்தப்பட்டது.

மேலும், சென்னை பெருநகர மாநகராட்சியின் மூலம் அனுமதி வழங்கப்படாத நிலையில் இப்பணியினை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டிய கட்டாய சூழ்நிலையில், அவசர அவசியம் கருதி 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15ன் கீழ் இப்பணியினை தொடர்ந்து இரு மாதங்களுக்கு (ஆகஸ்டு 2021 மற்றும் செப்டம்பர் 20201) 1.8.2021 முதல் 30.9.2021 அதே விலை விகித அடிப்படையில் சப்ளை செய்யவும், இப்பணிகளை 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், தோராய செலவினம் ரூ.15.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். அவசர அவசியம் கருதி 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15ன் கீழ் பணி மேற்கொண்டமைக்கு மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.845** **அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.5**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சேகரமாகும் மக்காத உலர்கழிவுகள் கசடுமண் கழிவுகள் அப்புறப்படுத்த போதிய இட வசதி இல்லாததினால் மூன்று காம்பாக்டர் வாகனங்களில் சேகரிக்கப்படும் உலர்கழிவுகளை டிப்பர் லாரிகளில் இறுதியாக்கம் செய்வதற்கு அனுப்பப்பட்டு வருகிறது. மேற்படி டிப்பர் லாரிகளில் லோடு ஏற்ற நகராட்சி ஜெசிபி வாகனம் மூலம் ஏற்றப்பட்டு வந்தது.

ஜெசிபி வாகன ஓட்டுநர் குறிப்பின் படி வாகனம் இயக்காமல் பழுதடைந்து உள்ளதால் வாடகை ஜெசிபி வாகனம் ஒன்றை பழுது நீக்கம் செய்யும் வரை பணி அமர்த்திக் கொள்ளவும், பொது சுகாதார அவசர அவசியம் கருதி உலர்கழிவுகள் தேங்கா வண்ணம் உடனுக்குடன் அப்புறப்படுத்திட உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.50000/-ற்கும், பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15 ன் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. இச்செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. அவசர அவசியம் பணியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால், 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சி சட்ட பிரிவு 15ன் கீழ் விலைப்புள்ளிகள் பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.846 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.6**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தினசரி சேகரமாகும் மரக்கழிவுகள் மற்றும் இளநீர் குடுவை கழிவுகளை தனியாக சேகரம் செய்து சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பெருங்குடி உரக்கிடங்கில் பிப்ரவரி 2021 முதல் அனுப்பப்பட்டு வருகிறது. மேற்படி கழிவுகளை நகராட்சி டிப்பர் லாரி வாகன பதிவு எண். TN 22 AZ 1346 மூலம் தினசரி அப்புறப்படுத்தப்பட்டு வந்தது. மேற்படி வாகனம் எஞ்சின் பழுது மற்றும் தகுதிச்சான்று புதுப்பிக்கும் வகையில் (FC) நிறுத்தப்பட்டுள்ளது.

எனவே, பொது சுகாதார அவசர கருதி மரக்கழிவுகளை தினசரி அகற்றிட டிராக்டர் வாகனம் ஒன்று நாள் வாடகை அடிப்படையில் பணி அமர்த்தி தரவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கும், பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15 ன் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. இச்செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் பணியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால், 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சி சட்ட பிரிவு 15ன் கீழ் விலைப்புள்ளிகள் பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.847 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.7**

செம்பாக்கம் நகராட்சி பகுதியில் குடியிருக்கும் மக்களுக்கு தற்போது தமிழக அரசு ஒவ்வொரு நாளும் மக்கள் நலனில் அக்கறை கொண்டு "**கொரோனா வைரஸ்**" தடுப்பு சம்பந்தமாக நாள்தோறும் அறிவிப்புகள் வெளிவந்த வண்ணம் உள்ளது. மேலும், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரைகளின் படி வழிமுறைகள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- பொது மக்கள் அனைவரும் அத்தியாவசிய தேவைக்கு மட்டுமே வீட்டிலிருந்து முககவசம் அனிந்து வெளியில் வரவேண்டும்.
- பொது மக்கள் கைகளை நன்றாக சோப்பு போட்டு கழுவி கொரோனா வைரஸிலிருந்து பாதுகாப்புடன் இருக்க வேண்டும்.
- கடைக்காரர்கள், கடைக்கு வரும் வாடிக்கையாளர்கள் முகக்கவசம் அணிந்து வருபவருக்கு மட்டுமே பொருட்கள் வழங்கப்பட வேண்டும்.
- வனிக நிறுவனங்களில் பொது மக்கள் சமூக இடைவெளியினை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும்.

மேலும், இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட முக்கிய பிரதான இடங்களிலும், பொது மக்களின் போக்குவரத்து அதிகமாக உள்ள இடங்களில் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில்

விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்திட உத்தேசிக்கப்பட்டு, கீழ்காணும் இரண்டு இடங்கள் தேர்வு செய்யப்பட்டது.

| வ. எண் | இடம் |
|---|---|
| 1 | மகாலட்சுமி நகர் பேருந்து நிறுத்தம் அருகில் |
| 2 | காமமாஜபுரம் பேருந்து நிறுத்தம் அருகில் |

தேர்வு செய்யபட்ட இடங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தும் பணிகளை ஒப்பந்தப்புள்ளிகள் கோரி செயல்படுத்த இயலாத சூழ்நிலையில், அவசர அவசியம் கருதி 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டப்பிரிவு 15 ன் கீழ் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தும் உரிமையாளர்களிடமிருந்து உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும், இதற்கான உத்தேச செலவினம் ரூ.10000/—ற்கு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. இச்செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் பணியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால், 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சி சட்ட பிரிவு 15ன் கீழ் விலைப்புள்ளிகள் பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.848 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.8**

மாவட்ட ஆட்சியர், செங்கல்பட்டு மாவட்டம் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம் அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரைகளின் படி கொரோனா 2ம் அலை தடுப்பு நடவடிக்கையின் கீழ், இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 15 வார்டு பகுதிகளில் ஒரு ஆட்டோ வாகனம் மூலம் பொது மக்களுக்கு விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

இந்நிலையில் சுகாதாரத்துறையின் மருத்துவ குழு மூலம் இந்நகராட்சி பகுதியில் அரசு வழிகாட்டுதலின் அடிப்படையில் ஒவ்வொரு குடியிருப்பு பகுதியிலும், முக்கிய பிரதான சாலைகளிலும், வணிக நிறுவனங்களிலும் மருத்துவ குழுவின் களப்பணியாளர்கள் மூலம் நாள்தோறும் கொரேனா பரிசோதனைகள் மேற்கொள்வதற்கு ஏதுவாகவும், தடுப்பூசி விழிப்புணர்வு பணிகளை மேற்கொள்ளவும், நகராட்சியின் சார்பில் ஆட்டோ வாகனம் பணியில் ஈடுபடுத்திட கோரியதன் பேரில், விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக ஒரு ஆட்டோ வாகனம் பயன்படுத்தலாம். அவசர அவசியம் கருதி மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 உப விதி 15ன் கீழ் ஆகஸ்டு 2021 முதல் அக்டோபர் 2021 வரை (3 மாதங்களுக்கு) பணியை மேற்கொள்ளவும், இதற்கான தோராய செலவினத் தொகை ரூ.170000/—க்குமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. இச்செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் பணியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால், 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சி சட்ட பிரிவு 15ன் கீழ் விலைப்புள்ளிகள் பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.849** **அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.9**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை 28 அவர்களின் கடிதம் நே.மு.க.எண்.1025/2018/எல்3 உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையால் தணிக்கை மேற்கொள்ளப்பட்டதில் நீண்ட காலம் நிலுவையில் உள்ள தணிக்கை கட்டணம் செலுத்தாமல் உள்ளதை உரிய தலைப்பில் செலுத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் இந்நகராட்சியின் மூலம் செலுத்த வேண்டிய தணிக்கை கட்டணம் தொகை ரூ.93145/- உரிய அரசு தலைப்பில் செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.850** **அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.10**

தமிழக அரசு மூலம் கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கைகளின் கீழ் 144 தடை உத்திரவி பிறப்பிக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளதால், அவசர அவசியம் கருதி இந்நகராட்சியில் 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்ட பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரம் மற்றும் செலவினத் தொகை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | கொரோணா நோய் தொற்று கண்ட பகுதிகளில் தடுப்பு வேலி அமைத்தல் பணி மேற்கொண்ட வகையில் ஒப்பந்ததாரர் மெஸ்ஸர்ஸ் அருணாச்சலம் இன்பிராஸ்ட்ரக்ஷர் நிறுவனத்திற்கு வழங்கியது | 186789 |
| 2 | ராஜராஜேஸ்வரி நகர் பகுதியில் புதிய 7.5 எச்.பி திறன் கொண்ட மின் மோட்டார் சப்ளை செய்து பொருத்துதல் பணி மே.கொண்ட ஒப்பந்ததாரர் திருமதி. ஆர். சுஜாதாக்கு வழங்கியது | 144332 |
| 3 | தெரு நாய்கள் அறுவை சிகிச்சை மையத்திற்கு தேவையான அறுவை சிகிச்சை உபகரணங்கள் சப்ளை செய்தல் பணி | 25099 |
| 4 | செம்பாக்கம் நகராட்சி பகுதியில் வார்டு வாரியாக ஜூலை 2021 மாதத்திற்கு பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த ஆட்டோ மைக் செட் மூலம் விளம்பரம் செய்தது வண்டி வாடகை, எரிபொருள், படிகள் மற்றும் இதர செலவுகள் உட்பட வாடகை தொகை ஒப்பந்ததாரர் திரு. கே. ராம்தாஸ் வழங்கியது | 55800 |

**அலுவலக குறிப்பு:** அவசர அவசியம் கருதி 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்ட பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களுக்கு மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.851** செலவினங்கள் பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

தனி அலுவலர்
செம்பாக்கம் நகராட்சி